22.07.2026

MCOP. No. : 629/2025 பெயர் : ராஜேஸ்குமார் ம.சா.1

ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1, 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தந்தை டிரைவராக வேலை செய்தார் என்றால் சரிதான். சுமார் 30 வருடங்களாக ஓட்டுனராக பணிபுரிந்தார். சேலத்தில் அப்துல் ரகுமான் என்பவர் நடத்தி வந்த ஃபோர் ஃபிஷ் என்ற மீன் கடையில் என்னுடைய அப்பா ஓட்டுனராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். அவரிடம் இரண்டு வருடங்கள் பணி புரிந்தார் என்றால் சரிதான்.

அவர் வாரம் ஒரு முறை நாகப்பட்டினத்திற்கு சென்று மீன் வாங்கி வருவார் என்றால் சரிதான். சம்பவம் நாமக்கல்லில் இருந்து சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான். விபத்து 07.05.2022 அன்று காலை 4:30 மணிக்கு நடந்தது என்று சரிதான். முன்னால் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து இடதுபுறம் மீது டாட்டா ஏஸ் வாகனம் மோதியதால் விபத்து நடந்தது என்றால் சரிதான். அரசு பேருந்து ஓட்டுனர் கவனமாகத்தான் பேருந்தை ஓட்டி வந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

விபத்து நடந்த இடத்தில் வேகத்தடை இருந்ததால் பேருந்து ஓட்டுனர் பேருந்தை பேருந்தின் வேகத்தை கட்டுப்படுத்தி வேகத்தடையில் ஏறி இறங்கிய போது அதன் பின்னால் அதிவேகத்தில் வந்த டாட்டா ஏஸ் வாகனம் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் மேற்படி பேருந்து பின்புறம் மோதி விபத்தை ஏற்படுத்தியது என்று சொன்னால் சரியல்ல.

விபத்து தொடர்பாக என்னுடைய அப்பாவின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். டாட்டா ஏஸ் வாகனத்தை ஓட்டுநரின் அதிவேகமும் தூக்கமின்மையும் வேலைப்பளுவும்தான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. டாட்டா ஏஸ் வாகனம் விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

நான் மனுவில் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்று சொன்னால் சரியல்ல. விபத்து எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படாததால் 1, 2ம் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1, 2ம் எதிர்மனுதாரர்களைப் பொருத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்கான மனுவில் பொய்யான விவரங்களை குறிப்பிட்டேன் என்று சொன்னால் சரியில்லை.

<u>3, 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

மனுவிலும் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலும் இந்த விபத்து அரசு பேருந்து ஓட்டுனரின் கவனக்குறைவால் நடைபெற்றது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அரசு பேருந்து கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் ஓட்டிச் சென்று திடீரென்று வாகனத்தை நிறுத்தியதால்தான் விபத்து ஏற்பட்டது என்று நான் மனுவில் குறிப்பிட்ட விபரம் உண்மை என்று சொன்னால் சரிதான்.

டாட்டா ஏஸ் வாகனம் அப்துல் ரகுமான் என்பவர் பெயரில் பதிவாகியுள்ளது. வாகனத்தை ஓட்டிச் செல்பவர் அவருடைய வாகனம் காப்பீடு செய்யப்பட்ட நிறுவனத்தில் இருந்து எந்த இழப்பீடு கோர முடியாது என்பதால் இந்த மனு நினைக்கத்தக்கதல்ல. மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யப்படாததால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>:

இல்லை.